1996 பிப்ரவரி 23]

இரண்டாந்தரக் குடிமகனாக ஆக்குகிற சட்டம், இன்றைக்கு இந்தியாவிலே, மொழிக் கொள்கையைப் பொறுத்தமட்டில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

அடுத்து, வினா எண் 114, திருமதி ஆர். சாவித்திரி அம்மாள், இருக்கையில் இல்லை.

வினா எண் 115, திரு. கே. செல்வராஜ், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

ஒவ்வொருவருக்கும் இனிமேல் ஒரு துணைக் கேள்விதான், நேரமாகிவிட்டது.

115--

ஊராட்சிகள் அமைத்தல்

39977*--திரு. கே. செல்வராஜ்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

கோயம்புத்தூர், பெரிய நாயக்கன்பாளையம் ஊராட்சி ஒன்றியம், கூடலூர் நகரப் பஞ்சாயத்து ஆகியவற்றைப் பிரித்து கவுண்டம்பாளையம் ஊராட்சியாகவும், தெற்குபாளையம் கிராமத்தை தலைமையிடமாகக் கொண்டு மற்றொரு ஊராட்சியாகவும் பிரிக்க அரசு திட்டமிட்டு உள்ளதா?

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கோயம்புத்தூர் மாவட்டம், பெரியநாயக்கன்பாளையம் ஊராட்சி ஒன்றியம், கூடலூர் பேரூராட்சி ஆகியவற்றைப் பிரிக்கவோ, கவுண்டம்பாளையம் மற்றும் தெற்குப்பாளையம் ஆகிய ஊராட்சிகள் அமைக்கவோ அரசிடம் திட்டம் இல்லை.

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியநாயக்கன்பாளையம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கூடலூர் நகரப் பஞ்சாயத்து என்பது, 20 ஆயிரம் வாக்குகள் கொண்ட, பெரிய பஞ்சாயத்து. அதனுடைய பரப்பளவும் சுமார் 20 கிலோமீட்டர் தூரம். கவுண்டம்பாளையம் என்ற ஊரிலிருந்து, தெற்குப்பாளையம் என்ற ஊருக்கு, பெரியநாயக்கன்பாளையத்தைச் சுற்றி வருவதற்கு 20 கிலோமீட்டர் தூரம்கூட வரவேண்டிய ஒரு சூழ்நிலை உள்ளதால்,

அங்கே 23 வாக்குச் சாவடிகள் கொண்ட பெரிய நகரப் பஞ்சாயத்தை, இரண்டாகப் பிரித்து, தெற்குப் பாளையத்தைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு நகரப் பஞ்சாயத்து வருகிறபோது, நிர்வாக வசதிக்கு உகந்ததாகவும், அங்கு பணியாற்றுகிற பஞ்சாயத்து அலுவலர்களுக்கும், பொதுமக்களுக்கும் வசதியாகவும் இருக்கும். எந்த ஒரு பிரச்சினைக்கும் அந்த நகரப் பஞ்சாயத்து அலுவலகத்திற்குச் செல்ல வேண்டுமென்றால், அந்த மக்கள் அவதிப்படுவதை மனதிலே கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் பரிசீலனை செய்து, கூடலூர் நகரப் பெரிய பஞ்சாயத்தை, இரண்டாகப் பிரிப்பதற்கு ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992-ஆம் ஆண்டு இந்திய அரசமைப்புத் திருத்தச் சட்டப்படி, இன்றைக்குத் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 58 நீக்கப்பட்டு, 1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் இயற்றப்பட்டு, 22-4-1994 முதல் அமலிலே இருந்து வருகிறது. அதன்படி, ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சி என்ற மூன்றடுக்கு ஊராட்சிகள் அமைய இருக்கின்றன. அந்த அடிப்படையில், ஊராட்சி, மற்றும் ஊராட்சி ஒன்றியம் போன்றவற்றை அமைத்தல், பிரித்தல், தரம் உயர்த்துதல் போன்ற கருத்துருக்களை, தமிழ்நாடு ஊராட்சிகள சட்டம் திருத்தியமைக்கப்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், ஊராட்சி அமைப்புகளில் பொறுப்பேற்கும்வரை தள்ளிவைக்கலாம் என, 11-11-1993 ஆம் நாளன்று ஊரக வளர்ச்சி அரசாணை 1 டி எண் 241-இல் ஆணையிடப்பட்டுள்ளது. எனவே, 1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின்கீழ் தேர்தல்கள் நடைபெற்று, தேர்ந்தெடுக்கப்படும் ஊராட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் பொறுப்பேற்கும்வரை, இதுபோன்ற கருத்துருக்களின்மீது நடவடிக்கை எடுக்க இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 116, டாக்டர் எஸ். சுந்தரராஜ், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

116--

ஆதிதிராவிடர் நலத்துறை கடன் வழங்குதல்

15686--டாக்டர் எஸ். சுந்தரராஜ்:

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--